Registered as a News Papar

மக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

## யாழ். வைத்தியசாலையில் பல் கட்டும் பிரிவு ஆரம்பம்

யாழ். போதனா வைத்தியசாலையில் முதல் தடவையாகபல் கட்டும் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது தறப்ப து இயங்கிவரும் பற்சிகிச்சை பகுதியின் ஓர் பிரிவாகவே இப்பல் கட்டும் பிரிவு செயற்படவுள்ளது. இதற்கு முன்னோடியாக பல் வடிவமைக்கும் தொழில் நுட்பவியலாளர் ஒருவர் இங்கு வந்துள்ளார். இவர் இதற்குத் தேவையான முன்னோடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார் இப்பிரிவு அடுத்த மாதம் முதல் செயற்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இப் பிரிவு இயங்கத் தொடங்கியதும் பெருந்தொகையானோர் இதனால் நன்மையடையவுள்ளனர். (ச)

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 10 (24 - 06 - 1992) புதன்கிழமை ஓசை: 127

நல்லூர் பிரதேச நூலகம்
...
யாழ்ப்பாணம்

## (வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதியில்)

# எந்நேரமும் பெரும் போர் மூளலாம்

# தாக்குதலுக்கு தயார் நிலையில் படைகள்

## கரையோரம் கடற்படை கப்பல்கள்

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்சேணி, கட்டைக்காடு பிரதேசத்தில் சிங்கள படையணிகளுக்கும் விடுதலைப்புலி வீரர்களுக்கும் மத்தியில் எந்நேரமும் பெரும் சமர் மூளலாமென அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன பெரும தாக்குதலுக்கு ஆயத்தங்களைச் செய்தவாறு சிங்கள இராணுவம் தயார் நிலையில் உள்ளதாகவும் இச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெற்றிலைக்சேணி கடற்பரப்பில் ஒரு பெரிய யுத்தக் கப்பலும் அதனைச்சூழநான்கு பீரங்கிப படகுகளும் தயார் நிலையில் நிலைகொண்டுள்ளன கடந்த இருவாரங்களாக இப்பகுதியில ஆயிரக்கணக்கில் துருப்புக்களும், ஆயுத தளபாடங்களும், கவச வாகனங்களும் குவிக்கப்பட்டு வந்தன என்பது வாசகர்கள் அறிந்ததே.

இதே சமயம் ஆனையிறவு முகாமிலும் புதிதாக படைகள் குவிக்கப்பட்டு அங்கும் போர் ஆயத்தங்கள் நடைபெறுவதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இந்தப் படை ஆயத்தங்களிலிருந்து ஆனையிறவிலிருந்தும், வெற்றிலைக்சேணி, கட்டைக்காடு பகுதியிலிருந்தும் இருமுனைகள் மூலம் சிறிலங்கா படைகள் இயக்கச்சிப் பகுதியை நோக்கி முன்னேற முயற்சிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## குண்டுவீச்சு, எறிகணைத்தாக்கு கட்டைக்காட்டில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு, வெற்றிலைக்சேணியைச் சூழவுள்ள பகுதிகளிலும் புல்லவெளிப் பகுதியிலும் நேற்று பலத்தஎறிகணை வீச்சும், விமானக்குண்டு வீச்சும் இடம் பெற்றன.

நேற்றுக் காலை கட்டைக்காடு வெற்றிலைக்சேணி

## வீரச்சாவு



## நயனாதீவில் வர்த்தகர் சுட்டுக் கொலை?

(புங்குடுதீவு)

நயினாதீவில் சிறிலங்கா கடற்படையினரால் அப்பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. கடந்த வாரம் இடம்பெற்றதாக கூறப்படும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவரின் பெயர் விபரங்கள் எதுவும் இடைக்கப் பெறவில்லை. கொல்லப்பட்டவர் அண்மையில் நயினாதீவில் இனந்தெரியாதோரால் எட்டுலட்ச ரூபாய் சூறையாடப்பட்ட சம்

[4 ஆம பக்கம் பார்க்க]

## பனங்காடு அகதிமுகாம் தீயினால் நாசம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆலையடிவேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருக்கும் பனங்காடு கிராமத்தில் இருந்த அகதி முகாமொன்று தீயினால் நாசமாகியுள்ளது. அந்த முகாமில் கடந்த இருவருடங்களுக்கும் மேலாக ஐம்பத்திரண்டு குடும்பங்களைச் சேர்ந்த சுமார் இருநூற்றுப் பன்னிரண்டு தமிழர்கள் வாழ்ந்து வந்தனர் தற்போது உடுத்த உடுப்பைத்தவிர ஏனைய அனைத்தையும் இவர்கள் இழந்தவர்களாகியுள்ளனர்.

சுன்னாகப்பகுதியில

## விமானக் குண்டு வீச்சு ஒரு பொதுமகன் காயம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் ஐயனார் கோவிலடியை அண்டிய பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இரு பொம்மர்கள் அப்பகுதியை நோக்கி அடுத்தடுத்து இருகுண்டுகளை வீசின

நேற்று மாலை 5 30 மணியளவில் இடம்பெற்ற இக்குண்டு வீச்சினால் ஒருவர் காயமடைந்தார் மற்றும் அப்பகுதியில் நின்ற பனைமரங்கள் சில முறிந்து வீழ்ந்தன.

தம்பிப்பிள்ளை கருணாமூர்த்தி (40 வயது) செல்லாச்சி அம்மர் வீதி சந்தைரோடை சுன்னாகம் ஆகிய பொதுமகனே காயமடைந்தவராவார் இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [பா]

## வெடிவிபத்தில் வீரச்சாவு







### வீரவேங்கை சுரேஷ்

கட்டைக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது இம்மோதலில் விடுதலைப் புலிகள் போராளி வீரவேங்கை சுரேஷ் (காசிப்பிள்ளை சிவராசா. மல்வத்தை மல்லிகைத்தீவு அம்பாறை) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

காடு வெத்திறலை ... பகுதிகளில் இராணுவ முகாமைச் சூழவுள்ள புலிகளின் நிலைகள் மீது சிறிலங்கா இராணுவத்தினரால் பலத்த எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

காலை 10 15 மணியளவில் அப்பகுதியினை வட்டமிட்ட இரண்டு சிறிலங்கா விமானப் படை குண்டுவீச்சு விமானங்கள் புல்லாவெளிப் பகுதியில் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பிடிவாதத்தைக் கைவிடுமாறு தமிழ்குழுக்களுக்கு அறிவுரை

[கொழும்பு]

'தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால்' என்ற ரீதியில் தமிழ் கட்சிகள் செயல் பட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சிரமம் ஏற்படும். எனவே தமிழ்க் கட்சிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. இரத்நாயக்கா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டிலுள்ள இரு பெரிய கட்சிகளும இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் முழு முயற்சியாக ஈடுபட்டுள்ளன. ஆனால் தமிழ்க் கட்சிகள் தான் அசிரத்தையாக உள்ளன. அவை விடாப்பிடியாக செயல்படுகின்றன. தாம் நினைப்பது நடக்க வேண்டும் என விரும்புகின்றன, தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என விடாடபிடியாக உள்ளன என்றும்-

இங்கு பேசிய தமிழ் எம்.பி. ஒருவர் பழைய ரெகோர்ட்டையே இசைத்தார். இராணுவம் கண்டபடி கொலை செய்யவில்லை. யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுள்ளது. எனவே சிறுபிள்ளைத் தனமாகப் பேசவோ செயல்படவோ கூடாது.

தமிழ்க் கட்சிகள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது அவரும் தெரிவுக்குழுவின் தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றே வலியுறுத்தியுள்ளார்.

இந்தப் பாராளுமன்றத்தில் 40 சிறுபான்மை எம்.பிக்கள் உள்ளனர். அரச தரப்பில் 22 பேரும், எதிர்க்கட்சியில் 18 பேரும், அரச தரப்பில் சிலர் செல்வாக்குள்ள அமைச்சராகவும் உள்ளனர். எனவே தற்போது சிறுபான்மையினர் செல்வாக்குள்ளவர்களாகக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிறிஸ்தவர்களுக்கு எதிராக மகாநாயக்கதேரோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

வறுமையைப் பயன்படுத்தி வறிய மக்களிடையே பிரசாரத்தை மேற்கொண்டும் கிறிஸ்தவ மதப்பிரிவினர் சிலர் அவர்களை மதமாற்றம் செய்வதில் ஈடுபட்டுவருவதாகவும், அதனைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல்வேண்டுமெனவும் அமரபுர நிக்காயாவின்பீடாதிபதியான மறகே பஞ்ஞசீகமகாநாயக்க தேரோ கேட்டுக் கொண்டுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா பகுதியில்

# இரு கிராமசேவையாளரால் நிவாரணப்பணம் கையாடல்

(வவுனியா)

மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உடனடி நிவாரணப் பணத்தை இரு கிராம சேவையாளர்கள் கையாடல் செய்துள்ளனர் என்ற தகவல் வெளிவந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ்உள்ள பகுதிகளில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு தலா ஆறாயிரம் ரூபா வீதம் நிவாரணப்பணம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவருகி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### லெப். சோழன்

பலாலிப்பகுதியில் 20-06-92 அன்று ஏற்பட்ட வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் சோழன் (செலஸ்ரின் விஜயராஜ் சென்ஜேம்ஸ் வீதி. குருநகர்) என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### 2ஆம் லெப். கஸ்காமுனி

பொன்னாலையில் நேற்றுக் காலை இடம் பெற்ற வெடிவிபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2ஆம் லெப்டினன்ட் கஸ்காமுனி (ஜேசுதாசன் ரோனாட்சா, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்) என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலைக்கழகத்திற்கான அனுமதி

# புதிய நடைமுறையை ஆட்சேபித்து திங்கள்மாபெரும்ஆர்ப்பாட்டபேரணி

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதியில் அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய திட்டத்தைக் கண்டித்து எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழ மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பொதுமக்கள் நலன் விரும்பிகள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கு கொள்கின்றனர். யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாக இருக்கும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி யாழ். கல்வித்திணைக்களம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யாழ். செயலகம் ஆகியவற்றுக்குச் சென்று கண்டன மக

[4 ஆம் பக்கம் பார்க்க]

### பல்கலைக் கழகத்தில்

# புதிய அனுமதி முறையினால் வெற்றிடம்உண்டு அனுமதி இல்லை

### -சிரேஷ்ட கணித விரிவுரையாளர்

(யாழ்ப்பாணம்)

திட்டமிட்ட அடிப்படையில் வடபகுதி மாணவர்கள் பல்கலைக்கழகம் அனுமதியினை குறைக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், சிறிலங்கா அரசும் வெட்டுப்புள்ளியினை மிக அதிகமாக உயர்த்தியதன் மூலம் அதிக புள்ளியினை பெற்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நேற்று நண்பகல் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக சிரேஷ்ட கணிதவிரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ சற்குணராசா ''வெட்டுப் புள்ளியினால்'' பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கூட்டத்தில் கூறினார்.

அரசின் இந்த நடவடிக்கையினை எதிர்த்து நாம் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதலை யூலை மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள அனைத்து மாணவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.இந்துபழையமாணவர் புதிய முறைக்கு ஆட்சேபம்

பல்கலைக்கழகங்களுக்கான புதிய அனுமதி நடைமுறை குறித்து ஆட்சேபம் தெரிவித்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கம் ஆட்சேப கடிதம் ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு அனுப்பிவைத்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் நன்னீர்க் கிணறு, குடியிருப்பு வசதிகளுடன் 5 பரப்புக் காணியும், சிவன் கோவில் வீதியில் 3,1/4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு; த.வேலாயுதம், சட்டத்தரணி, ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி.
(2712)

### உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

உரும்பராய் ஒஸ்கா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டம்இன்று பி.ப. 4 மணிக்குக் கோண்டாவில் குமரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறஉள்ளது. இன்றைய ஆட்டத்தில் பாடும்மீன் - A அணியைஎதிர்த்து பாடும்மீன்- B அணியும்) !சென்றொக் - A அணியை எதிர்த்து கிறீன் பீல்ட் அணியும் விளையாடு கின்றன. [2711]

### விற்பனையாகின்றன

A/L வினாவிடை (உயர்கல்விப்பதிப்பகம் கொழும்புத்துறை) CR கொப்பிகள், 5ம் ஆண்டு கட்டுரைத்தேன்துளி 60, CHINA கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தக சாலை யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம் யாழ்ப்பாணம். [2708]

### மெய்வல்லுனர் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். நாயன்மார்கட்டுமகேஸ்வரி வித்தியசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை (26. 6. 92) பிற்பகல் 2 00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் த. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இப்போட்டி நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக சி. வேலாயுதம் (பிரதி கல்விப் பணிப்பாளர் யாழ். கோட்டம்) திரு. மு. இராமலிங்கம் (கொத்தணி அதிபர்-நல்லூர்) கௌரவ விருந்தினராக திரு. சிராளன் (பிரதேசப் பொறுப்பாளர்- அரியாலை) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

### பாராளுமன்ற

# காலம் கடந்த ஒப்பந்தத்தின் கீழ் நாடுகடத்துவது முறையற்றது

-டி. வி. சென்னன்

(கொழும்பு)

இந்திய கடவுச் சீட்டுப் பெற்ற தோட்டத் தொழிலாளர்கள் விடயம் காலம் கடந்த ஒரு ஒப்பந்தத்தின் கீழ் இடம் பெற்ற சம்பவம். எனவே இதுகுறித்து இலங்கை இந்திய அரசாங்கங்கள் கூடிப் பேசி முடிவெடுக்க வேண்டுமென்று பதுளை மாவட்ட எம். பி. டி. வி. சென்னன் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் பேசுகையில்;

கடவுச்சீட்டு பெற்ற இவர்களுக்கு அரசாங்கம் நூறு ரூபா என்று 'பொக்கற்மணி' வழங்கவில்லை. இவர்கள் இங்கு உழைத்தே சாப்பிடுகின்றனர்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய கடவுச் சீட்டுக்கு முப்பது வருடங்களுக்கு முன் குடும்பத்தலைவர்களே விண்ணப்பித்தவர்கள். ஆனால் இன்று வாழும் அவர்களது பிள்ளைகள் விண்ணப்பிக்கவில்லை. இவர்களது பெயர் இக்கடவுச் சீட்டில் பதியப்பட்டுள்ளது. அதனால் அவர்களை இந்தியா அனுப்பப்படவேண்டும் என்று கூறப்படுகின்றது.

அன்று இக்கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றோ வேண்டாம் என்றோ இ. தொ. கா. கூறவில்லை. அதே போன்று இன்று இவர்களை நாடு திரும்ப வேண்டாம் என்றும் கூறவில்லை, அவர்களதுவிருப்பப்படி அன்று விண்ணப்பித்தனர். அவர் அவர் விருப்பப்படி இந்தியா போவது குறித்து இவர்களே முடிவு செய்வார்கள். இது விடயத்தில் இ தொ. கா. எதனையும் கூறவில்லை.

எனவே காலங்கடந்தாவது இந்த ஒப்பந்தம் குறித்து இந்தியா இலங்கை இரு நாடுகளும் பேச்சி ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

### மலையக மக்கள் உரிமையைப் பெற

# வாக்காளர் இடாப்புகளில் பெயர்களை பதியவும்

-செல்லச்சாமி

(கொழும்பு)

மலையக மக்கள் உரிமைகளைப் பெறுவதற்குள்ள ஒரே வழி அவர்கள் வாக்காளர் டாப்புக்களில் தமது பெயரைப் பதிவு செய்துகொள்வதே யாகும் என்று ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இ.தொ. கா. தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், வருடா வருடம் யூன், யூலை மாதங்களை வாக்காளர் பிரிவு மாதங்களாகக் கொண்டு மலையக மக்கள் மிகக் கவனமாகச் செயல்பட வேண்டும். மலையக மக்கள் தமது சக்தியைக் காட்டவும், உரிமையைப் பெற்றுக் கொள்ளவும் ஒரே வழி வாக்காளராகத் தம்மை பதிவு செய்து கொள்வதே யாகும்.

### பட்டதாரிகளுக்கு

# வேலை வாய்ப்பு வழங்க தனியார்துறை பின்னடிப்பு

## பாஸ்கரலிங்கம் கண்டனம்

(கொழும்பு)

வேலை இல்லாதிருக்கும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் தனியார் துறையினர் பின்னிற்பது குறித்து கொள்கை திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கூடுதலான பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்ற உறுதி மொழியுடனேயே பல அரசு துறைகள் தனியார் மயமாக்கப்பட்டன என்று தெரிவித்த பாஸ்கரலிங்கம் இந்த விடயத்தில் தனியார் துறையினர் தொடர்ந்தும் ஒத்துழையாதிருந்ததால் அரச பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கான நிதியை பல வழிகளிலும் தனியார் துறையினரிடம் இருந்தே அறவிட வேண்டி வருமென்றும் எச்சரித்தார்.

பட்டதாரிகளுக்கு பலதுறை உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். கருத்தரங்கில் பல கம்பனிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தற்போதைய பட்டதாரிகளைப் பொறுத்தவரை அவர்கள் பரந்த அறிவின்றி அரச உத்தியோகத்தை எதிர்பார்த்துக் குறுகிய வட்டத்தினுள் அறிவு புகட்டப்பட்டுள்ளார்கள் என்றும், ஆங்கில அறிவு அவர்களுக்குச் சூன்யமாக உள்ளது என்றும் கம்பனிகளின் பிரதிநிதிகள் தமது இயலாமைக்கான காரணத்தைத் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுப் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் வட்டவல:

ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளில் கைத்தொழில் பொருளாதாரம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளன. அங்கு

### காணிப்பங்கீட்டில்

# தோட்டத் தொழிலாளர் புறக்கணிப்பு

(பதுளை)

பண்டாரவளை லியங்காவெல தோட்டத்தில் இடம் பெற்றுள்ள காணிப் பங்கீட்டில் தோட்டத் தொழிலாளர்கள் பயிர்செய்த காணிகள் வெளியாருக்கு பகிர்ந்தளிக்கப் பட்டதாக விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர். எம். கிருஷ்ண சாமி தெரிவித்தார்.

இக் காணிப்பங்கீட்டில் தோட்டத் தொழிலாளர்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும், இது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே நேரம் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள காணிகளுக்கூடே காணிகளை துப்பரவு செய்யும் வேலைகளை வெளியார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் இதற்குள் தோட்டத் தொழிலாளர்களின் மரக்கறிக் காணிகளும் அடங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

### கருத்தரங்கு

சமூக விஞ்ஞான மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளகருத்தரங்குத்தொடரில் ''கற்றலும் ஞாபக சக்தியும்'' எனும் பொருவில் டாக்டர். செந்தில்ராஜ் அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார்.

இக்கருத்தரங்கு பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்று புதன்கிழமை (24- 06- 92) பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞான மன்றம அன்புடன் அழைக்கின்றது.

### தடுப்புக்காவலில் 3 வருடங்கள் இருப்போர்

# வழக்கு தாக்கல் செய்ய உதவி வழங்கப்படும்

மூன்று வருடங்களுக்கு மேலாக தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளோர் தாங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு மனித உரிமைகள் செயலணிக்குழு உதவிபுரிய இருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகள் இப்பொழுது மேற்கொள்ளப் படுவதாக மனித உரிமைகள் செயலணிக் குழுவின் தலைவரும் ஓய்வு பெற்ற நீதியரசருமான ஜே. எப். சூசா தெரிவித்தார்.

பள்ளேகலை, களுத்துறை. பெலவத்த. பூஸா. வீரவில ஆகிய ஐந்து தடுப்பு முகாம்களில் 6588 பேர் உள்ளனர் இவர்களில் அதிகமானோர் 3 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சூசா நேரடியாக கதைத்து வழக்கு அதற்கு தேவையான பணத்தையும் மனித உரிமைகள் செயலணிக்குழு வழங்கும் என்றும் சூசா தெரிவித்தார்.

இதுதவிர நாட்டின் ஏனைய பாகங்களில் கைது செய்யப் படுவோர் தொடர்பாக பெற்றோர் உறவினர் மனித உரிமைகள் செயலணிக்குழுவுக்கு புகார் செய்யும் வகையில் மட்டக்களப்பு, மாத்தறை,கண்டி ஆகிய இடங்களிலும் குழுவின் கிளைகள் திறக்கப்படவுள்ளது.

அந்தவகையில் ஜூலை முதலாம் திகதி மாத்தறை ராஹூல வீதி 105ஆம் இலக்கத்தில் ஒருகிளையும் பொறுப்பாக மாத்தறை நீதிமன்ற முன்னாள் பதிவாளர் ஒ பி. பியதிஸ்ஸயும் ஜூலை 3ஆம் திகதி மட்டக்களப்பில் கோவிந்தன் வீதி 16ஆம் இலக்கத்தில் கிங்ஸ்லி பாத்திலொட் பொறுப்பில் ஒரு கிளையும் கண்டி பேராதனை வீதியில் 839/2 ஏ இலக்கத்தில் மன்

## கொத்தணி விளை.போட்டி

சுழிபுரம் கொத்தணி விளையாட்டுப்போட்டி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டி இன்று புதன்கிழமை காலை 8 00 மணிக்கு கொத்தணி அதிபர் செ பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் வே. மகேசவேலு அவர்களும்,சிறப்பு விருந்தினராக சிவராஜரட்ணம் அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

# வாக்காளர்களாக பதிய கிராமசேவகர் நிபந்தனை

மாத்தளை மாவட்ட தோட்டத் தொழிலாளர்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ள கிராம சேவகர்கள் பிரஜாவுரிமை சான்றிதழ் கோருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு ஹூன்னஸ் கிரிய தோட்டத்தைச் சேர்ந்த நான்கு தோட்டங்களில்உள்ள சுமார் எண்பது குடும்பங்களுக்கு பிரஜாவுரிமைசான்றிதழ் இல்லாத காரணத்தினால் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது.


மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம நடாத்தும்

## 'சுக நலம்' கூத்து

இறுதி நாள் நிகழ்ச்சி கைலாஸ் விளையாட்டுக் கழக ஆதரவில் (24-06-1992) இன்று இரவு 7 மணிக்கு கைலாசப்பிள்ளையார் கோவிலடி விளையாட்டுத் திடலில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அருணா இசைக் குழுவினரின் இசைநிகழ்ச்சி இடம் பெறும்.

( 2714 ) செயலாளர்

## எமது புதிய வெளியீடுகள்

- தங்கராசா
- வானமே எல்லை
- ஆவாரம் பூ
- இது நம்ம பூமி
- காதல் ஒரு கவிதை
- ஒரு ஊமையின் ராகம்
- இது தான்டா சட்டம்
- கிழக்கு வெளுத்தாச்சு

குறிப்பு: புதிய படங்கள் யாவும் புத்தம்புதிய கசெட்டில் பதிவு செய்து வாடகைக்கு கொடுக்கின்றோம். அத்துடன் புதிய படங்கள் யாவும் புதிய கசெட்டில் விற்பனையும் செய்கின்றோம்.

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

# பாராளுமன்ற தெரிவுக் குழு ஜூன் 29ல் கூடும்

(கொழும்பு)

களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க தலைமையில் வரும் ஜூன் 29-ஆம் திகதி கூட இருக்கும் தெரிவுக் குழுக் கூட்டத்தில் இரண்டு முக்கியமான தஸ்தாவேஜுகள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவுக் குழுவிடம் கையளித்த இனப் பிரச்சினைகள் தீர்வுக்கான ஆலோசனைகள் அடங்கிய திட்டமும் மற்றும் தமிழ்க் குழுக்கள் சமர்ப்பித்த நான்கு அம்சத்திட்டமும் கூட்ட நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தைப் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பனம் பொருள் உற்பத்தி அதிகரிப்பு

பனம் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் 23 தென்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும், பனை அபிவிருத்திச் சபை ஆகியன பனம் பொருள் உற்பத்தியில் கணிசமான அளவு அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளன. 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 132,038 போத்தல்கள் பதனீரும், 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2,954,905 போத்தல்கள் பதனீரும், 1992 ஆம் ஆண்டு சித்திரை வரையான காலப் பகுதியில் 1,933,481 போத்தல்கள் பதனீரும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1990-ம் ஆண்டில் 7,476 போத்தல்கள் பனம் பாணியும், 1991 ஆம் ஆண்டில் 163,334 போத்தல்கள் பனம் பாணியும், இவ் ஆண்டு சித்திரை வரையான காலப் பகுதியில் 191,323 போத்தல்கள் பனம் பாணியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன

...இருந்தே அறிவட்ட வேண்டி வருமென்றும் எச்சரித்தார்.

பட்டதாரிகளுக்கு பலதுறைகளிலும் பயிற்சி அளித்தல், வேலை வாய்ப்பு அளித்தல் போன்றவற்றுக்கென மனித வளங்களைப் பயன்படுத்தும் பதினொரு கம்பனிகளை அரசு நியமித்திருந்தது. இந்தக் கம்பனிகளின் செயற்பாடுகள் குறித்து மதிப்பிடுவதற்காகப் பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் இடம் பெற்ற கருத்தரங்கில் பாஸ்கரலிங்கம் தலைமை தாங்கி...

நாடுகளில் கைத்தொழில் பொருளாதாரம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளன. அங்கு கைத்தொழில் அதிபர்களுக்கோ, தொழில் நுட்பவியலாளர்களுக்கோ ஆங்கிலம் தெரியாது. ஆனால் அவர்கள் சம்பந்தப்பட்ட தொழில் அறிவையும் பயிற்சியையும் அளித்துநல்லதொழில் அறிஞர்களை உருவாக்குவதுடன் தொழிற்துறையையும் விருத்தி செய்கிறார்கள். இதை இங்கும் முன்னுதாரணமாக கொள்ள வேண்டும்.

# வானிலை அவதானிப்பை நவீனமாக்க வேண்டும்

## -பாராளுமன்றத்தில் தினேஷ்

(கொழும்பு)

வானிலை அவதான நிலையத்தை நவீன மயமாக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே வானிலை அவதான நிலையத்தால் அண்மைய வெள்ள ஆபத்தை உணரவோ எச்சரிக்கவோ முடியவில்லை. எதற்கெல்லாமோ நிதி ஒதுக்கும் அரசு வானிலை அவதான நிலையத்திற்கு பணம் ஒதுக்காதது பெரும் தவறு. இனியாவது இத்தவறு திருத்தப்படவேண்டும்.

இவ்வாறு பாராளுமன்றத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி எம்.பி. தினேஷ்குணவர்த்தனா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஐம்பது கோடி ரூபா செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட பாராளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கியது, கொழும்பு - 7 வெள்ளத்தில் மூழ்கியது' உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் படகில் பயணம் செய்ய நேரிட்டது எனவும் தெரிவித்தார்.

# ஊட்டச்சத்துக் குறைவால் மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைப் பிள்ளைகள் ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனை ஓரளவு நிவர்த்தி செய்யும் முகமாக பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் தாய்மாருக்கு உள்ளூரில் கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு சத்துணவு தயாரிக்கும் வழிகள் பற்றிய செயல்முறை சுகாதாரக் கல்வி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

யுனிசெவ் உதவியுடன் யாழ் மாநகராட்சி மன்ற நகர்ப்புற அடிப்படைத் தேவைகள் நிகழ்ச்சித்திட்டப் பிரிவினால் முதல்கட்டமாக ஆறு வகுப்புக்களை நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

...ளர்.

இவர்களுடன் சூசா நேரடியாக கதைத்து வழக்கு தொடுக்க ஆலோசனை வழங்கியதுடன் வழக்கை நடாத்துவதற்கான சட்டத்தரணியையும் ஏற்பாடு செய்துள்ளார்.

...பொறுப்பில் ஒரு கிளையும் கண்டி பேராதனை வீதியில் 839/2 ஏ இலக்கத்தில் முன்னாள் நீதிமன்ற முதலியார் எம். ஸ்வாகிர் பொறுப்பில் ஒரு கிளையும் திறந்து வைக்கப்பட உள்ளன.

## இனப்பிரச்சினை தீர்வு குறித்து

# தமிழ்க் கட்சிகள் இப்போது சுயமாக சிந்திக்கின்றன

## - ரணில் விக்கிரமசிங்க

வெளிநாட்டிலிருந்து ஆலோசனை எதுவும் பெறாமல் தமிழ் கட்சிகள் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து நாட்டினுள் சுயமாகச் சிந்திப்பது அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும் என்று பாராளுமன்றத்தில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

ஆனால், ஒவ்வொரு சமூகமும் தமது உரிமைகளையும் நலன்களையும் மாத்திரம் சிந்தித்துச் செயலாற்றுவது கவலைக்குரிய தென்றும் மற்றவர்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதை மறந்திருப்பது சபையில் நிலவும் பயங்கரமான தன்மையென்றும் அவர் தெரிவித்தார்.


கலாலயாவின்

மனைப்பொருளியலும், கைத்திறனும்

# பொருட்காட்சி

- ஓவியங்கள்
- கைப்பணிகள்
- செயற்கை மலர்கள்
- கேக் அலங்காரம்
- தைத்த ஆடைகள்
- உணவு வகைகள்

இடம் : கலாலயா, விக்டோரியாவீதி, யாழ்நகர். (ஆஸ்பத்திரியின் பின்புறம்)

காலம் : ஜூன் 27 ம், 28 ம், 29-ம் திகதிகளில் காலை 9.00முதல் மாலை 6.00வரை

(சி/4589)



குண[illegible] வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4587)



# நினைவு கூருகின்றோம்...

## 1992-06-24

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**அம்மாச்சி** (முத்துக்குட்டி செல்லத்துரை - கிரான் குளம், மட்டக்களப்பு )

இதே ஆண்டு சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட வயோதிபப் பெண்.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு ஊறணிப் பகுதியில் தேசவிரோத சக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**உதயன்** (ச. இன்பராஜ் - மாமாங்கம் மட்டக்களப்பு.)

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி திருநகர்ப் பகுதியில், இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். டானியல்** (அந்தோனிப்பிள்ளை இரத்தின கோபால் - கனகராயன்குளம், புளியங்குளம், ஓமந்தை, வவுனியா.)

சுன்னாகத்தில் தேசவிரோத சக்திகளினால் கைது செய்யப்பட்டு - சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்

**இராமநாதன் கணேஸ்குமார்**

1990 ஆம் ஆண்டு பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ரதீஸ்** (கிருஸ்ணபிள்ளை ஜெகநாதன் - செல்வஇல்லம், காந்திஊர், மாலாவத்தை, புலோலி வடமேற்கு.)

பரந்தனில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4586)

நல்லூர் பிரே நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

பெரும்பான்மைக்கு வலிமை உள்ளது. ஆனால் நேர்மை இல்லை. சிறு [illegible] எமே [illegible]றும் நேர்மையாக இரு[illegible]

— [illegible] ப்ளே[illegible]

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 05

# தட்டிக் கழிக்கிறார் பிரேமதாசா

"உங்களுக்குள் இன்னும் கருத்து வேறுபாடு இருப்பதாக நான் நினைக்கின்றேன். சிங்களவருக்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்புடையதான விடயங்களை ஏற்றுக் கொண்டால் பிரச்சினைகளை நாம் தீர்த்து வைத்து விட முடியும்" இவ்வாறு கொழும்பில் தன்னைச் சந்தித்த தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளிடம் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்காத தமிழ் மக்களினால் ஏற்றுக் கொள்ளவும் முடியாத அதேவேளை, கொழும்பிலுள்ள தமிழ்க்கட்சிகள் அரசியல் அஞ்ஞாத வாசத்தில் இருந்து தாம் தப்பித்துக் கொள்வதற்காக முன்வைத்த மிகக் குறைந்த தீர்வுத் திட்டம் குறித்தே சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் இப்பேச்சானது கொழும்பிலுள்ள தமிழ்க் குழுவினரின் ஒற்றுமையின்மையால் பிரச்சினையை தீர்த்து வைக்க முடியாதுள்ளது எனக் குற்றம் சாட்டுவது போல் உள்ளது. திரு. பிரேமதாசாவின் இக்கூற்றானது தலையை விட்டு வாலைப் பிடிப்பது போன்றதாகும். இன்றைய நிலையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கும் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களுக்கும் தொடர்பு எதுவுமில்லை. விடுதலைப் புலிகள் இயக்கமின்றியும், தமிழ் மக்களின் சம்மதமின்றியும் தமிழர்தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது. இதனை இன்று பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

யதார்த்த நிலை இவ்வாறு இருக்கும்போது தமிழ்க்குழுக்களின் ஒற்றுமை இன்மையும், அதனால், இனப்பிரச்சினை தீர்வு சாத்தியப்படாமல் இருப்பதாகவும் கூறுவது வெறும் ஏமாற்றுத்தனமானதாகும். இவைஒருபுறமிருக்க தமிழர் குழுக்கள் ஒற்றுமை இல்லை என்றால், தமிழர் தேசிய இனப்பிரச்சினை தீர்த்துவைக்கும் அளவிற்கு சிங்கள அரசியற் கட்சிகள் மட்டத்தில் ஒற்றுமை நிலவுகின்றனவா?

ஒரு கட்சி அரசியல் லாபம் சம்பாதித்துவிடும், என்பதற்காக மற்றக்கட்சி இனப்பிரச்சினை தீர்விற்கான திட்டத்தைக் கூட- செயல்முறை பிற்பாடு -முன்வைக்க சிறிலங்காப் பேரினவாதக் கட்சிகள் அஞ்சுகின்றன. இதேவேளை, இனப்பிரச்சினை தொடர்பாக சிங்கள கட்சிகளுக்கு உள்ளேயே பலமான கருத்து முரண்பாடு

# சிறிலங்கா இராணுவத் திட்டத்தின் அரசியல் உள் நோக்கங்கள்

இரண்டு வருடமாக நடைபெற்றுவரும் தொடர்ச்சியான விடாப்பிடியான இராணுவ நடவடிக்கைகள் மூலம் சிங்கள அரசால் எதையும் சாதிக்க முடியாத நிலையிலும் கூட போரை தொடர்ந்து நடாத்த சிங்கள அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது, பாரியதொரு இராணுவத் திட்டத்தை நடாத்தி முடிக்க சிங்களப் படைகள் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்றன.

புவியியல் ரீதியாக, வட தமிழீழத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் முப்படைகளின் உதவியுடன் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு — அப்பகுதிகளைக் கைப்பற்றி அங்கே தரைக்குக் குறுக்கே இராணுவ வேலிகளை அமைக்கத் திட்டம் தீட்டியுள்ளது.

இதன் மூலம் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கான புலிகளின் படை நகர்வுகளைத் தடுத்து, அவ்வப் பகுதிகளுக்குள் புலிகளை முடக்கி. சுற்றில் அழித்து விடும் நோக்குடன் இந்த இராணுவத் திட்டத்தைச் சிங்கள அரசின் படைத்துறைத் தலைமை தீட்டியுள்ளது

இத்திட்டத்தின்படி வட-தென் தமிழீழத்தை இணைக்கும் மணலாற்றுப் பகுதியையும், யாழ். குடாவை வன்னி நிலப்பகுதியுடன் இணைக்கும் கொம்படிப் பகுதியையும் கைப்பற்றி தமிழீழத்தை மூன்று வெவ்வேறு இராணுவ வலயங்களாகத் தீர்மானித்துள்ளது.

அதாவது, தென் தமிழீழம் ஒரு வலயமாகவும் வன்னி மன்னார்ப் பகுதிகள் இன்னொரு வலயமாகவும், யாழ். குடாநாட்டைத் தனியொரு வலயமாகவும் வைத்திருக்க சிங்கள இராணுவபீடம் விரும்புகின்றது.

இப்பாரிய இராணுவத் திட்டத்தின் பிரதான அரசியல் நோக்கம் யாதெனில் தமிழரின் தேசிய பலத்தைச் சிதைப்பது தான்.

தென்தமிழீழத்தை வடதமிழீழத்திலிருந்து நிரந்தரமாகத் துண்டித்து, தென்தமிழீழத்தைச் சிங்கள மயப்படுத்துவது இந்த இராணுவத்திட்டத்தின் ஒரு நோக்கம் ஆகும். அதன் மூலம் தென்தமிழீழத்தைத் தமிழர்களிடமிருந்து அபகரித்து, அங்கே புலிகளையும் இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தி, அவர்களின் அரசியல் முக்கியத்துவத்தைச் சிதைத்து விடுவதன் மூலம் தமிழ்த்தேசிய பலத்தை முறியடிக்கலாம் என, சிங்கள அரசு கருதுகின்றது

எந்த வழிமுறை மூலமாவது தென்தமிழீழத்தைத் தமிழர்களிடமிருந்து பறித்துச் சிங்களமயமாக்குவதுதான், சிங்களப் பேரினவாத சக்திகளின் உடனடி நோக்கமாகும் இந்த நோக்கை அடைவதில் பிரதான சிங்கள அரசியல் கட்சிகளுள் எந்தக் கருத்து பேதமுமில்லை.

இந்த இராணுவத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால், இன்று அரசியல் அரங்கில் அடிபடும் வட-கிழக்கு இணைப்பு என்ற பேச்சை இல்லாமல் செய்யலாம் என்பது, சிறிலங்கா அரசின் கணிப்பு.

வட -கிழக்கு இணைப்பைத் தடுக்கவேண்டுமாயின், முதலில் புலிகள் கிழக்கில் ஆதிக்கம் பெறுவதைத் தடுக்க வேண்டும் எனக்கருதுகின்றது.

வட-கிழக்கிற்கான தரைத் தொடர்புகள் இருக்கும் வரை கிழக்கில் புலிகளின் ஆதிக்கத்தைத் தடுக்க முடியாது என்று, சிங்களப் படைத்துறைத் தலைமை நம்புகின்றது.

ஏனெனில், தேவையான நேரத்தில், தேவையான பொருள்களை வடக்கிலிருந்து புலிகள் கிழக்கிற்கு எடுத்துச் சென்று, சிங்களப்படைக்கெதிராக வெற்றிகரமாகப்போரிட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என அது கருதுகின்றது.

> வட தமிழீழத்தில் சில கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறிலங்காவின் படைத்துறைத் தலைமை திட்டமிட்டுள்ளது.
>
> இந்த இராணுவத்திட்டத்திற்குப் பின்னால் தமிழ் இனத்துக்குக் கேடு விளைவிக்கக்கூடிய பல அரசியல் நோக்கங்கள் இருக்கின்றன.
>
> இந்த இராணுவத்திட்டத்தின் பிரதான அரசியல நோக்கம் தமிழரின் தேசிய பலத்தைச் சிதைத்து விடுவதுதான்.
>
> அதாவது தமிழீழத்திற்குக் குறுக்காக இரண்டு இடங்களில் இராணுவ வேலிகளை அமைத்து, தமிழீழத்தை மூன்று இராணுவ வலயங்களாகப்பிரித்துபடிப்படியாகஒவ்வொரு வலயத்திற்குள்ளும பலத்தைப் பிரயோகித்து புலிகளை அழித்து தமிழ்த் தேசியத்தின் முதுகெலும்பை உடைக்க சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது.
>
> இந்த இராணுவத்திட்டத்தைப் பல கட்டங்களாக நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ளது. இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இரண்டு இராணுவ நடவடிக்கைகளை நடாத்தியுள்ளது.

ஆகவே இதைத்தடுத்துநிறுத்த விரும்புகின்றது. மணலாற்றுப் பகுதியூடாகவே கிழக்கிற்கான தரைத் தொடர்பு உண்டு. எனவே மணலாற்றுப் பகுதியை முழுமையாகக் கைப்பற்றி, அங்கே பலத்தைக் குவித்து தரைக்குக் குறுக்காக ஒரு இராணுவ வேலியை அமைத்துப் புலிகளின் பாதையைத் தடுக்கலாம் எனச் சிங்களத் தளபதிகள் நம்புகின்றார்கள்.

இதன் காரணமாக, மணலாற்றுப் பகுதியில் பாரியதொரு இராணுவ நடவடிக்கையைச் செய்து முடிப்பது, இந்த இராணுவத்திட்டத்தின் ஒரு அங்கம்.

அதேசமயம் வடக்கிலுள்ள புலிகள் தங்களது பலத்தைத் திரட்டி மணலாற்றில் அமைக்கப்படும். இராணுவ வேலியை உடைத்து விடுவார்கள் எனவும் இராணுவத் தலைமைப் பீடம் அஞ்சுகிறது.

எனவே, குடாநாட்டுக்குள்ளிருந்து உதவிகள் மணலாற்றைச் சென்றடைவதைத் தடுக்க விரும்புகிறது.

அதற்காகக் குடாநாட்டை வன்னியுடன் இணைக்கும் நிலப்பரப்பாகிய கொம்படியில் ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்து வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுத் தளம் வரையுள்ள பகுதியை ஊடறுத்து ஒரு இராணுவ வேலியை அமைத்து புலிகளை முடக்க விரும்புகின்றது.

இவ்விதமாக மூன்று தனித்தனி வலயங்களுக்குள் புலிகளை முடக்கி, அவர்களின் போரிடும் ஆற்றலைச் சிதைத்து, புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் கிழக்கை எதிர்ப்பின்றிச் சிங்களமயப்படுத்தலாம் என, சிறிலங்காப் பேரினவாத சக்திகள் எதிர்பார்க்கின்றன.

இவ்விதம் செய்வதன் மூலம் தமிழரின் தேசிய பலத்தைச் சிதைத்துப் போராட்டத்தை நசுக்கலாம் என, சிங்கள ஆளும் வர்க்கம் எண்ணுகின்றது.

தமிழ்த் தேசியத்திற்கெதிரான இவ் அரசியல் இலக்கை அடைவதற்கான இராணுவத் திட்டத்தின் ஒரு பகுதி ஏற்கெனவே தொடங்கி விட்டது.

பலாலி தளத்தைச் சூழவும், முல்லைத்தீவிலிருந்து மணலாறு நோக்கியும், இரண்டு இராணுவ நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு விட்டன.

இந்த இரு இடங்களிலும் நடைபெற்ற சண்டைகளில் சில உயர்நிலை அதிகாரிகள் உட்பட 100இற்கும் மேற்பட்ட படையினரைச் சிங்களப் படை இழந்துள்ளது.

இவ்விதமாக, ஆரம்பக்கட்டத்திலேயே சிங்களப் படைக்கு பலத்த இழப்பு ஏற்பட்ட போதிலும், தனது இராணுவத்திட்டத்தை நிறைவேற்றுவதில், சிங்கள இராணுவத்தலைமைப் பீடம் உறுதி பூண்டுநிற்பது போலத் தெரிகிறது

நன்றி: விடுதலைப் புலிகள்

# ஈராக்கில் உணவுத் தட்டுப்பாடு 41,000பேர் உயிரிழப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் இந்த ஆண்டின் [illegible] பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது [illegible] தொடர்ந்து ஈராக்கிற்கு எதிராக பொருளாதாரத் தடை [illegible]

ஜப்பான் சென்ற

# பிரதமர் நரசிம்மராவிற்கு அரண்மனையில் வரவேற்பு

(டோக்கியோ)

டோக்கியோவின் [illegible] ஜப்பான் பிரதமருடன் நட[illegible]

திட்டத்தைக் கூட- செயல்முறை பிற்பாடு -முன்வைக்க சிறிலங்காப் பேரினவாதக் கட்சிகள் அஞ்சுகின்றன. இதேவேளை, இனப்பிரச்சினை தொடர்பாக சிங்கள கட்சிகளுக்கு உள்ளேயே பலமான கருத்து முரண்பாடுகள் காணப்படுகையில், தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமையை காரணம் காட்டுவது மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதை ஒத்ததாகும்.

அடுத்ததாக, சிங்களவரும் முஸ்லிம்களும் ஏற்புடையதான விடயங்களை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டால் பிரச்சினையை நாம் தீர்த்து வைக்க முடியும் எனத் திரு பிரேமதாசா குறிப்பிட்டமை, தமது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதும், திசை திருப்பி விடுவதுமான நடவடிக்கை ஆகும்.

தமிழர் தேசிய இனப்பிரச்சினை, தமிழ்மக்கள் குறித்து சிங்களவரின் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையின் காரணமாகவே உருப்பெற்றதாகும். இதற்கு சிங்கள அரசியற் கட்சிகளின் இனவாதப் போக்கே காரணமுமாகும். கடந்தவாரம் சிறிலங்கா பாராளுமன்றத்தில் பேசிய பிரதிச் சபாநாயகர் காமினிபொன்சேகா "நாட்டின் இன்றைய இனப்பிரச்சினைக்கு இருபெரும் அரசியற் கட்சிகளின் நடவடிக்கைகளே காரணம்" எனத் தெரிவித்திருந்ததில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ளலாம்;

இதேவேளை கடந்த காலத்தில் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவென முன்வைக்கப்பட்ட எந்தத் தீர்வுத் திட்டத்தையும் சிங்களப் பேரினவாத சக்திகள் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழர்களால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகளைக் கூட சிங்கள பேரினவாதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் திரு. பிரேமதாசாவின் கருத்துப்படி சிங்களவர் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதானால் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கும் குறைவான ஓர் தீர்வுத் திட்டத்தையே முன்வைக்க வேண்டும். அதைத்தான் திரு. பிரேமதாசா எதிர்பார்க்கின்றார் போலும்,

திரு. பிரேமதாசாவின் இவ் எதிர்பார்க்கை அரசியல் தீர்வில் அவர் கொண்டுள்ள அசிரத்தையையும் அக்கறையீனத்தையுமே காட்டுவதாகும். தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு வைக்க வேண்டிய பொறுப்பு சிங்கள அரசாங்கத்தையே சாரும். ஏனெனில் பிரச்சினைக்கு வித்திட்டவர்கள் அவர்கள். அடுத்ததாக அதிகாரம் பொருந்திய அரசாக இருப்பவர்களும் அவர்களே அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டியவர்களும் அவர்களே. அதிகாரம் இல்லாதவர்கள் எவ்வாறு பகிர்ந்தளிப்பது? எதைப் பகிர்ந்தளிப்பது?

(பாக்தாத்)

ஈராக்கில் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் உணவு, மருந்து என்பனவற்றின் தட்டுப்பாடு காரணமாகபதினொன்காயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் உட்பட சுமார் நாற்பத்தோராயிரம் பேர் இறந்து போயிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக்கிற்கு ஐக்கிய நாடுகள் சபை பொருளாதாரத்தடை விதித்திருப்பதையடுத்து அங்கு மருந்துப் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது

ஈராக் 1990 ஆம் ஆண்டில் அயல்நாடான குவைத் நாட்டை ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து ஈராக்கிற்கு எதிராக பொருளாதாரத் தடைகள் ஐக்கிய நாடுகள் சபையினால் அமுல்படுத்தப்படுவது தெரிந்ததே.

## கம்யூனிச ஆர்ப்பாட்டத்தில் 13 பொலிசார் காயம்

மொஸ்கோவில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கம்யூனிச ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே நடைபெற்ற மோதல்களில் பதின்மூன்று பொலிசார் காயமடைந்து உள்ளனர்.

(டோக்கியோ)

டோக்கியோவின் அக்காசாகா அரண்மனையில் நேற்று இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவிற்கு உத்தியோக பூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்வரவேற்பு வைபவத்தில் ஜப்பான் பிரதமர் மியாசாவா அமைச்சரவை உறுப்பினர்கள், மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அரண்மனைப் பாதுகாப்பு ஊழியர்களின் அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

ஜப்பான் பிரதமருடன் நடக்கும் பேச்சுக்களின் போது, வாணிபம், முதலீடு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பவற்றை அதிகரிப்பது பற்றிக் கலந்துரையாடப்பட விருப்பதுடன் மாறிவரும் உலக நிலைமையைக் கருதி நெருங்கிய அரசியல் உறவுகள் பற்றியும் இவ் இரு தலைவர்களும் ஆராயவுள்ளனர்.

பிரதமர் பி.வி நரசிம்மராவ் ஜப்பானிய தொழில் நிபுணர்கள், தொழில் முனைவர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருடன் கலந்துரையாடவிருப்பதுடன் சர்வதேச உறவுகளுக்கான விஞ்ஞான மன்றத்தின் கூட்டத்திலும் உரை நிகழ்த்தவுள்ளார்.

# விமான நிலையத்தை முற்றுகையிடும் கடற்பருந்துகள் கூட்டம்

லண்டனில் உள்ள ஹீத்ரோ விமான நிலையத்தை அன்றாடம் ஆயிரக்கணக்கான கடற்பருந்துக் கூட்டம் முற்றுகையிடும் இரகசியம் பலருக்கு தெரிந்திருக்காது.

இரவு சூழ்ந்த பின்னர் கடற்பருந்துக் கூட்டம் ஒன்று ஹீத்ரோ விமான நிலையத்தை நோக்கி வருவதாக கூறப்படுகிறது. பறவைகளை ஈர்க்கும் சக்தி விமானங்களுக்கு இருப்பதாக லண்டன் "ஹீத்ரோ" விமான நிலையத்தில் பணி புரியும் ஸ்டீவ்றாட் கூறுகிறார்.

விமான நிலையத்துக்குள் வரும் பறவைகளை அச்சுறுத்தும் தொழிலில் கடந்த ஐந்தாண்டு காலமாக இருந்து வருகிறார் ஸ்டீவ் இவர் தாம் அனுபவத்தில் கண்டதை பின்வருமாறு கூறுகிறார்.

பறவைகள் சூடு தாங்க முடியாத வேளையில் குளிர்மை தேடி விமானங்கள் இருக்கும் இடத்தை தேடி வருவதாகவும் ஹீத்ரோ விமான நிலையத்திற்கு மேலாக கூட்டம் கூட்டமாக 8,000 முதல் 10,000 வரையான பறவைகள் பரந்து விரிந்து கிடக்கும் விமானங்களின் சிறகுகளைக் கண்டதும் தாம் ஓய்வெடுக்க சிறந்த இடம் அதுவே என நினைத்து விமானச் சிறகுகளின் கீழ் தஞ்சம் புகுந்துவிட எத்தனிக்கின்றன.

ஆனால் தரை இறங்கும் பருந்துகள் கூட்டத்தால் தொல்லை எதுவும் ஏற்படுவதில்லை என ஸ்டீவ் கூறுகிறார். அமைதியாக தரைஇறங்கி ஓடுபாதை முதல் விமானங்கள் இருக்கும் இடங்களில் கூடத் தஞ்சம் புகுந்து விடும்இப்பறவைகள் கூட்டம், அதிகாலைக்குள் மேலெழுந்து பறந்து விடுகின்றன. இப்படிக்கூட்டமாக மேலெழுந்து கடல் பருந்துகள் பறக்கும் போது ஆகாயத்தில் பறக்கும் விமானங்கள் ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்க நேரலாம் எனவும் அவர் கூறுகிறார்.

இராட்சத ஜெட்விமானம் ஒன்றின் மின் விசிறியில் ஒரு பறவை சிக்கிக்கொண்டால் அந்த விசிறியின் சுழற்சி வேகத்தில் விமானத்துக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடலாம் மின்விசிறி உடைந்து விடுவதால் விமானம் விபத்துக்குள்ளாகி விடும் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த இது போன்ற ஒரு சம்பவத்தில் போர்த்துக்கேய யுத்த விமானமொன்றின் விமானமோட்டி உயிர் துறந்தார் விமானத்தின் என்ஜினுக்குள் பறவை சிக்கிக் கொண்டதால் விமானம் லிஸ்பனுக்கு அருகே விபத்துக்கு உள்ளாகியது. இவ்வாண்டு முற்பகுதியில் கென்யாவிலும் இவ்வாறான விபத்து ஏற்பட்டது பறவை ஒன்றின்மீது விமானம் மோதியபோது ஏற்பட்ட விபத்தில் ஏழு பேர் பலியாகினர்.

பறவைகளை அச்சுறுத்துவதைவிட அவற்றை கலைத்து விடுவதே மேல் என ஸ்டீவ் கூறுகிறார்.

பறவைகளை கலைக்கும் பணியை வெற்றிகரமாக நடாத்துகிறார் பறவைக் கூட்டம் ஒன்றைக் கண்டவுடன் அவை எந்த இனத்தைச் சேர்ந்த பறவைகள் என்பதைத்தான் முதலில் அறிய முயற்சிப்போம். பின்னர் ஒரு நாடாவை 90 செக்கன்களுக்கு பதிய விடுவோம்.

வழமையாக வரும் பறவைகள் சத்தத்தைக் கேட்டவுடன் அலட்சியம் செய்யவும் எத்தனிக்கின்றன. புத்தியுள்ள பறவைகள் குறிப்பாக காகம் போன்றவை சத்தத்தை அலட்சியம் செய்வதாக ஸ்டீவ் கூறுகிறார். அவ்வாறு அலட்சியம் செய்யப்பட்டதும் துப்பாக்கியின் துணை நாடப்படுகிறது பறவைகளை சுட்டுக் கொல்லும் நோக்கமுடன் துப்பாக்கிகளை இவர்கள் பயன்படுத்துவது கிடையாது அவற்றை அச்சுறுத்தும் விதத்தில் தரையில் இருந்து சுமார் 100 அடி உயரத்திற்கு செல்லக்கூடிய வேட்டுக்களையே இவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

துப்பாக்கி வேட்டுக்களுக்கும் அஞ்சாது இடம்பிடிக்கும் பறவைகளும் இருக்கின்றன. ஆனால் கூட்டம் கூட்டமாக வரும் பறவைகள் தான் இவர்களுக்கு பெரும் தலையிடியைக் கொடுக்கின்றன.

விமான நிலைய தரையில் வளர்க்கப்படும் புல் சற்று உயரமாகவே வளர்க்கப்படுகின்றது வளர்ந்த புல் இருக்கும் இடத்திற்குப் பறவைகள் செல்வதில்லை. அதனாலேயே இவ்வாறு புல் சற்று உயரமாக விமான நிலையத்தில் வளர்க்கப்படுகிறது.

## இந்தியாவில் வங்கிகளுக்கு கட்டுப்பாடு

வங்கிகளுக்கிடையே முதலீடு தொடர்பான பணப்பரிவர்த்தனை செய்ய இந்தியன் றிசேர்வ் வங்கி கட்டுப்பாடுகளை கடுமையாக்கியுள்ளது. சமீபத்தில் நடந்த பங்குப்பத்திர மோசடி தொடர்பாக விசாரித்த ஜானகிராமன் கமிட்டி வெளியிட்ட சிபாரிசுகளின் அடிப்படையில் இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அரசின் செக்யூரிட்டி பத்திரம் தொடர்பான வங்கிகளின் பரிவர்த்தனை அனைத்தும் மத்திய றிசேர்வ் வங்கியின் பொதுக்கணக்கு மூலமே பரிமாற்றம் செய்யப்படல் வேண்டும் என்று வங்கிக்கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதனிடையே, பங்குப்பத்திர மோசடி தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள ஹர்சத் மேத்தா, றிசேர்வ் வங்கி அதிகாரி சீதாராமன் ஆகியோர் அடுத்த மூன்றாம் திகதிவரை பொலிஸ் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளனர்.

# பலஇனமக்கள் ஒன்றுசேர்ந்துவாழ சுவிஸ் ஆட்சிஅமைப்புசிறந்ததாகும்

## சுவிஸ்ஸர்லாந்துதூதுவர் பெருமிதம்

(கொழும்பு)

''இலங்கையைப் போலவே சுவிஸ்ஸர்லாந்தும் பல மொழி இனங்களைக் கொண்ட ஒரு நாடு பல சமூகங்களையும் சேர்ந்தவர்கள் எப்படி ஒன்றிணைந்து வாழ முடியும் என்பதற்குசுவிஸ்ஸர்லாந்தின்ஆட்சி முறை ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகின்றது. இது இலங்கைக்கு ஒரு ஊக்குவிப்பான விடயமாக இருக்கும்''

இவ்வாறு இலங்கைக்கான சுவிஸ்ஸர்லாந்தின் தூதுவர் அன்றிகிறேபென்றிட கொழும்புப்பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கண்காட்சி ஒன்றை திறந்து வைத்துப்பேசும்போது தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது;

சுவிஸ்ஸர்லாந்தில் ஜெர்மன் பிரெஞ்சு, இத்தாலியன்,றொமன்ஸ் ஆகிய நான்கு மொழிகளைக்கொண்டுள்ளது. இங்கு புரட்டஸ்தாந்து, கத்தோலிக்கம் ஆகிய இரண்டு மதங்களும் உள்ளன. எந்தஒரு நாட்டிலும் சிறுபான்மையினரின் பாதுகாப்பு ஆகியன பேணப்பட வேண்டுமானால், அந்த நாட்டின் அமைப்பு முறையால் அல்லதுபாரம்பரியங்களினால் மட்டுமே முடியும்.

இன்று சுவிஸ்ஸர்லாந்து ஒரு நவீன சமுதாயத்தைப் பற்றி பெருமை பேசுகின்றது அதே வேளையில் இதுஉள்ளூர்பெறுமானங்களையும், பாரம்பரியங்களையும் மிக முக்கியமானதாகக் கருதும் ஒரு சமூகமாகவே உள்ளது.

எல்லா சமுதாயங்களிலும் உள்ளது போல, மக்கள் தமது சுதந்திரத்தை விரும்புகின்றனர் தங்கள் பாடடிலேயே வசிக்க விரும்புகின்றனர் தமது தனிப்பட்டவைகளை வெளியிடவிரும்புகின்றனர் அதே வேளையில் ஒருவருக்கு கீழ் அல்லது ஒரு பிரதேசத்திற்கு கீழ் வசிக்க விரும்புகின்றனர். இது ஏனென்றால், உள்ளூர் பாரம்பரியங்களும், உள்ளூர் மொழியும் முக்கியமானவென அவர்கள் கருதுவதால்தான்

மனித உரிமைகளை அங்கீகரிப்பதும் அதனை மதிப்பதும் சிறுபான்மையினரின் பாதுகாப்பு ஆகியன ஒவ்வொரு சமுதாயத்திலும் அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். மனித உரிமைகள் எல்லா சமூகத்திலும் பெறுமதி வாய்ந்த ஒன்றாகவேஉள்ளது.

சமஷ்டி இல்லாமல் சுவிஸ்ஸர்லாந்து சுவிஸ்ஸர்லாந்தாக இருக்காது. இந்தநாட்டிற்குள் மூவாயிரம்மாநகரசபைகளும், 26 கன்ரன்களும் (மாகாணங்கள்) உள்ளன. இவை ஒவ்வொன்றும் சொந்தமான அரசியல் அமைப்பையும் தனது சொந்த விடயங்களை கவனிப்பதற்கு வேண்டிய நிதியையும் கொண்டிருக்கும்.

இங்குள்ள ஒவ்வொருவரும் மூன்று விதமான பிரஜா உரிமைகளைக் கொண்டிருப்பார்கள்.

இவ்வாறு வழக்கத்திற்கு முரணான விடயங்களை நடைமுறைக்குக் கொண்டு வரும் போது பொதுமக்களின் அபிப்பிராயத்தை அரசாங்கமும் பாராளுமன்றமும் பெறமுயல்கின்றன. ஆனால் இந்தநேரடி ஜனநாயகமுறை ஒருபழைமைவாதக் கொள்கையாகவே கருதப்படுகிறது நீண்ட காலப் போக்கில் இது சுவிஸ்ஸர்லாந்திற்கு கூடாததாக தென்படவில்லை.

இவ்வாறு சுவிஸ்ஸர்லாந்து தூதுவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

## சண்டைநிறுத்தம்

(மொஸ்கோ)

மால்டோவாவின் பிரிந்து சென்ற குடியரசுப் பகுதியில் கடந்த சில நாட்களாக இடம்பெறும் தீவிரச் சண்டைகளை முடிவுக்குகொண்டு வர ரஷ்யா மற்றும் மால்டோவாவின் அதிபர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

# அரசாங்கத்தை கவிழ்க்க சதி ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வில் உள்ள சிலர் காங்கிரஸ்காரர் சிலருடன் சேர்ந்து தமது ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்வதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார் அவர் மேலும் கூறுகையில்,

அரசியலில் இணக்கமான நல்லுறவு என்பதெல்லாம் நிலையானதல்ல காங்கிரஸ் காரர்களுடன் சேர்ந்து எனது ஆட்சியைக் கவிழ்க்க எனது கட்சிக்காரர்களே சதி செய்கிறார்கள் என்றும் புலிகளின் கொலைப் பட்டியலில் தானும் இருப்பதால் பாதுகாப்பு கவசம் அணிந்து இருக்கிறேன் என்றும் தெரிவித்தார்.

## கருததரங்கு

பருத்தித்துறை பிரதேசத்தில் சனசமூக நிலையங்கள் தோறும் பேரர்க்கால கருத்தரங்கு கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது.

வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் தலைமையில இக் கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருகின்றன. மற்றும்இப்பகுதி வீடுகளுக்குச் சென்றும் மக்களுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். (82)

## வெடிவிபத்து

தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். மக்கள் அஞ்சலிக்காக புகழுடல் இன்று மத்தியூஸ் வீதி கிறீங்கிங்ஸ் - வாசிகசாலையில் பிற்பகல் 2-00 மணிக்கு வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப் படும்.

## இரு கிராம

றது.

வெளியேறிய தமிழ்க்குடும்பங்களில். பல குடும்பங்கள் இன்னமும் இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி மீளக்குடியமர முன்வரவிலலை இவ்வாறு அஞ்சும் குடும்பங்களில் முப்பது குடும்பத் தலைவர்களின் பெயரில் கையெழுத்திட்டே இந்தக் கிராமசேவையாளர்கள் கையாடல்செய்துள்ளனர்

கையாடல் செய்யப்பட்ட நிவாரணப் பணத்திற்குரியவர்களில்சிலர் மீளக்குடிய ர்ந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)

## கிறிஸ்தவ

கம் உதவ 1992 கண்காட்சி திடலில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் கலந்து கொண்ட அனைத்து மதபீடங்களின் மாநாட்டில் கலந்து கொண்ட மகாநாயக்கதேரோ மேலும் கூறுகையில் இது அரசாங்கத்தின் உடனடிக் கவனத்தைப்பெறவேண்டிய அவசரப்

# முல்லை இராணுவ முகாமில் வங்கிப் பணம்,நகை மறைவு

முல்லைத்தீவு இராணுவ முகாமில் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள், ரொக்கப்பணம் என்பன களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு யூன் 11 ஆம் திகதி யுத்தம் ஆரம்பித்ததை அடுத்து முல்லைத்தீவு வங்கிகளில் இருந்த நகைகள், பணம் ஆகியன பாதுகாப்பிற்காக சிறிலங்கா இராணுவ முகாமிற்கு மாற்றப்பட்டது. அங்கேயே இந்தக்களவு இடம்பெற்றுள்ளது.

களவுபோயுள்ள பணத்தின் பெறுமதி ஏழு லட்சம் ரூபாய் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்க ஆபரணங்களின் பெறுமதி இதுவரை மதிப்பீடுசெய்யப்படவில்லை.

இதுதொடர்பாக இரண்டு லெப்டினன்களும், எட்டு இராணுவத்தினரும கைதுசெய்யப்பட்டு இராணுவ பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

## புதிய

கழகம் முன்வர வேண்டும். இதன் மூலம் வரப்போகும் சந்ததியினர் பாதிக்கப்படாமல் இருக்க இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்றார்.

### வெற்றிடமுண்டு அனுமதியில்லை

தொடர்ந்து அவர் பேசும் போது தற்போது அரசு கடைப்பிடித்து வரும் அனுமதி முறையின் படி யாழ். பல்கலைக்கழகத்தில் அனைத்துப் பீடங்களிலும் வெற்றிடங்கள் இருப்பினும் மாணவர்களை அனுமதிக்க முடியாத நிலை உருவாகும் இதனால் திறமையுள்ள பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை இழக்க வேண்டி ஏற்படும் இந்த நிலையில் அரசு அறிமுகப் படுத்தியுள்ள பல்கலைக் கழக கல்லூரிகள் அர்த்தமற்றதாகி விடுகிறது.

### முற்றிலும் தவறானது

க. பொ. த. உயர்தரப் பரீட்சையைப் பொறுத்தவரையில் இது ஒரு போட்டிப் பரீட்சையாகும் இவ்வாறான போட்டிப் பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படல் வேண்டும். நாட்டின் ஒரு பகுதியைத் தவிர்த்து போட்டிப் பரீட்சையை நடாத்துவது என்பது மனிதாபிமான அடிப்படையிலும், ஜனநாயக அடிப்படையிலும முற்றிலும் ஓர் தவறான செயலாகும்.

### செவிசாய்க்கவில்லை

1990 ஆம் ஆண்டு ஆகஸ்டில் வடபகுதியில் பரீட்சை நடைபெறாமல் தடைப்பட்டுப் போன சமயம் வடபகுதி மாணவர்கள் பலர் கொழும்பு சென்று பரீட்சை எழுதினர் இவ்வாறான செயலை தடுத்து

## உயர்தர மாணவர் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 90 - 91 ஆண்டு க. பொ. த. (உ/தர) விசேட பரீட்சைக்கு தோற்றிய அனைத்து பாடசாலை மாணவர்களையும் அவரவர்பாடசாலைகளுக்கு உடனடியாக இன்று சமுகம் அளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பாடசாலை உயர்தர மாணவர், மாணவர் சங்கத்துடன் இணைந்து அரசின் புதிய பல்கலைக்கழக அனுமதியையெதிர்த்து எதிர்வரும்திங்கட்கிழமை யாழ்ப்பணத்தில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் கண்டனப் பேரணியில் அனைத்து உயர்தர மாணவர்களையும் கலந்து கொள்வதற்கு தயார் படுத்த யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை வேண்டுகோள் விடுத்துள்ளது. (பா)

## புதிய நடை

ஜர்கள் கையளிக்கப்பட இருக்கின்றது இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கான தயாரிப்பு வேலைகள் துரிதமாக மேற் கொள்ளப்பட்டு வருகிறது

[க].[பா].[ச[

## யாழ் இந்து

இக் கடிதத்தில் 1990 ஆம் ஆண்டுப் பரீட்சை 1991 ஆம் ஆண்டு விசேட பரீட்சை ஆகிய இரண்டையும் ஒரே பரீட்சையாக கணிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில்

# குண்டுவைக்க முயன்றதாக இளைஞர்மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தை வெடிவைத்து தகர்க்க சதி செய்ததாக குற்றஞ்சாட்டி கிளிநொச்சி வட்டக்கச்சியைச் சேர்ந்த தில்லையம்பலம் (எழிலன் வயது 19) என்பவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நஜீ என்பவருடன் சேர்ந்து 1 4 91 க்கும் 30.4.91க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த சதியை அவர் புரிந்ததாக குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் அல்விஸ் சார்ஜன்ட் விஜயசேன, இன்ஸ்பெக்டர் நிலாப்தீன், சார்ஜன்ட் கருணகிரி வாக்குமூலத்தை பதிவுசெய்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஸ். பி.ரட்ணசிங்க ஆகியோர் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நீதிபதி ரி.பி. வீரசூரியா முன்னிலையில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி எடுக்கப்படும் என்றும்

எழிலன் ஏற்கனவே ஜே ஓ சி. ரஞ்சன் குண்டு வெடிப்புகள் சம்பந்தமாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ள தில்லையம்பலம் தயாபரனின் ஒன்றுவிட்ட சகோதரர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனிநபர் அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும், தொழில் புரியும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஊழியர்களின் நன்மை கருதி மறுமலர்ச்சிக் கழகத்தில் அவர்களுக்கான தனிநபர் அட்டைகள் பதியப்பட்டு வருகின்றன.

இதுவரை தனிநபர் அட்டைகளைப் பெறாத மாணவர்கள் அதனைப் பெற்று பூர்த்தி செய்து இம்மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக மறுமலர்ச்சிக் கழகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்ற

## ஆறுமாத காலத்தில்

# லஞ்ச மோசடி தொடர்பாக ஆயிரம் முறைப்பாடுகள்

இலஞ்ச மோசடி தொடர்பாக கடந்த ஆறு மாதங்களில் ஆயிரம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், இவற்றில் இருநூற்றி ஐம்பது புகார்கள் பொலிசாருக்கு எதிரானவை என்றும் லஞ்சத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் புகார்கள் தொடர்பாக பதினெட்டு வழக்குகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும்,

பொலிஸ் திணைக்களத்தில் குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளார்கள் என்றும் லஞ்சத் திணைக்கள ஆணையாளர் திருமதி நெலும் கமகே தெரிவித்தார்.

# இரத்தினபுரியில் தமிழருக்கு காணிகள்பெற்றுத்தருவேன் -தொண்டமான்

(இரத்தினபுரி)

''இரத்தினபுரிப் பகுதியில் காணி இல்லாதிருக்கும் தமிழர்களுக்கு விரைவில் காணிகள் கள், லயத்தின் முன்னாலுள்ள

நீதிமன்றத்தில் பதிவு செய்யப் பட்டிருப்பதாகவும்,

பொலிஸ் திணைக்களத்தில் மேலும் முப்பத்தியாறு பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்.

பொலிஸ் அதிகாரி, பொலிஸ் இன்ஸ்பெக்டர், உதவிப் பொலிஸ் அதிகாரி ஒருவரும்

## பிடிவாதத்தைக்

காணப்படுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு நாம் தீர்வு காணும்போது அது வடக்கு - கிழக்குக்கு மட்டுமல்ல, முழு நாட்டுக்கும் பொருத்தமானதாக அமைய வேண்டும் என்றும் அவர் தமதுரையில் குறிப்பிட்டார்.

''இரத்தினபுரிப் பகுதியில் காணி இல்லாதிருக்கும் தமிழர்களுக்கு விரைவில் காணிகள் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுப்பேன்'' என இ.தொ.கா தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் பேசியபோதே இதனைத் தொண்டமான் தெரிவித்தார்.

காணிப்பிரச்சினை, கோயில் பிரச்சினை, இரத்தினபுரி தமிழ் வித்தியாலயத்திலேற்பட்டுள்ள பிரச்சினைகளுட்பட தமிழ் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண என்னால் இயன்ற சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக உள்ளேன்.

இன்று மலையக தோட்டங்களின் நிர்வாகம் கைமாறியுள்ளது. ஆனால் தோட்ட லயன்

## -தொண்டமான்

கள், லயத்தின் முன்னாலுள்ள காணிகள், வயல்வெளிகள் அனைத்தையும் அதில் குடியிருப்பவர்கள் சொந்தமாக வைத்திருக்கலாம். ஆனால் பிறருக்கு விற்க முடியாது.

இக்காணிகளை, லயன்களை அவற்றில் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்குமாறு அரசிடம் கேட்டேன். ஆனால் இக்குடியிருப்புக்களை அவர்கள் பிறருக்கு விற்கக் கூடுமென தெரிவிக்கப்பட்டது.

தோட்டங்களில் புதிய நிர்வாக அமைப்பு ஒன்று விரைவில் ஏற்படுத்தப்படும். இந்த அமைப்பே, மலையக மக்களின் காணி, சுகாதாரம், குடிநீர்ப் பிரச்சினைகள் உட்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் கையாளும் என்றும் தெரிவித்தார்.

க்கு முன்பாக மறுமலர்ச்சிக் கழகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விஞ்ஞான கலைப்பீட மாணவர்கள் நண்பகல் 11-12 மணி வரையும் மருத்துவ பீட மாணவர்கள் பிற்பகல் 5—6 மணி வரையும் தனிநபர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம். (பா)

## நயினாதீவில்

பவத்தில் பணத்தைப் பறி கொடுத்த வர்த்தகர்களில் ஒருவராக இருக்கலாம் என்று நம்பப்படுவதாக ஊர்ஜிதமற்ற தவல்கள் கூறுகின்றன. கொழும்பு சென்று பொருள்கள் கொள்வனவு செய்து வருவதற்காக புறப்பட்ட சில வர்த்தகர்களிடமிருந்து சில வாரங்களுக்கு முன் எட்டு இலட்சம் ரூபாய் பணம் சூறையாடப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது (22)

மேலும் கூறுகையில் இது அரசாங்கத்தின் உடனடிக் கவனத்தைப்பெறவேண்டிய அவசரப் பிரச்சினை என்றும், இந்தப் போக்குத் தொடருமானால் மத அடிப்படையிலான முரண்பாடு வளருவது தவிர்க்கமுடியாததாகும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் பல்வேறு கிராமங்களுக்கும் இந்தப் போக்கு பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதனால் அரசாங்கம் இது தொடர்பாக உடன் செயலில் இறங்கவேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

இத்தகைய கிறிஸ்தவக்குழுக்கள் வறுமையில் வாடும் பாமர மக்களுக்கு உணவுப்பொருள்களும், நிதியுதவியும் அளிப்பதன் மூலமாக அவர்களை மதம் மாற வைப்பதாகக் கூறப்படுகிறது

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட பதுளை மறை மாவட்ட பிஷப் எட்மன்ட் பெர்னாண்டோ பேசுகையில் பஞ்சசீல தேரோ குறிப்பிட்டவைகள் உண்மையானதும், ஆதாரபூர்வமானதும் எனத் தெரிவித்ததுடன், மத அடிப்படை வாதிகள்தான் இச்செயலில் ஈடுபடுவதாகவும் இத்தகையவர்கள் றோமன் கத்தோலிக்கமதத்தைச் சார்ந்தவர்களைக் கூட கிறிஸ்தவ மதத்தின் தமது பிரிவுகளுக்கு இழுத்தெடுக்க முயல்வதாகவும் குறிப்பிட்டார் இவர்கள் பௌத்தமதத்தைச் சார்ந்தவர்களையும் கிறிஸ்தவமதத்தின் தமது பிரிவுகளுக்கு இழுத்தெடுக்க முயற்சிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இத்தகைய சக்திகளின் செயற்பாடு உலகளாவிய ரீதியில் நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார். எனினும் இத்தகைய செயற்பாடுகளைக் கண்டித்த பிஷப் எட்மன்ட் பெர்னான்டோ இவர்களின் செயற்பாடுகள் கண்காணிக்கப் படவேண்டுமெனவும் கட்டுப் படுத்தப்படவேண்டியவை எனவும் குறிப்பிட்டார்.

மாணவர்கள் பலர் கொழும்பு சென்று பரீட்சை எழுதினர் இவ்வாறான செயலை தடுத்து நிறுத்துவதற்கு பொது நல அமைப்புக்களினால் விடுக்கப் பட்ட வேண்டுகோளை செவி சாய்க்காமல் விட்டதன் விளைவே இது என்று கொழும்பு சென்று பரீட்சை எழுதியவர்கள் மீண்டும் நடைபெற்ற விசேட பரீட்சையிலும் தோற்றியிருக்கிறார்கள்.

## மண்டியிட வேண்டியதில்லை

1970 ஆம் ஆண்டு அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் திட்டத்திற்கு ஒப்பான இவ் விடயம் வடபகுதி மாணவர்கள் எவரும் எதிர்பார்க்காதது எதிர்பாராமல் ஏற்பட்டிருக்கும் மிகப் பெரிய எதிர் அலை ஒன்றைக் மாணவ சமுதாயம் சந்தித்துள்ளது. இதற்காக அரசிடம் மண்டியிட வேண்டிய அவசியம் எமது மாணவர்களுக்கு இல்லை எதிராக போராட வேண்டும்.

## போராடத் தயாராகுங்கள்

எமது மாணவ சமூகத்திற் எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் மேற்

பரீட்சையாக கணிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

படி நடவடிக்கைக்கு எதிராக போராடுவதற்கு அனைவரும் தயாராக வேண்டும் மாணவர்கள், ஆசிரியர்கள் நலன்விரும்பிகள் பொதுமக்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் போராடத் தயாராக வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

மேற்படி நடைமுறையால் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளைக் காரணம் காட்டி அரசுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு நீதி கிடைக்க வழி தேடப்பட வேண்டும். இதற்கு ஏற்படப் போகும் பணச் செலவை ஈடு செய்வதற்கு ஒரு நிதியம் உருவாக்கப்பட வேண்டும் சுமார் பத்து லட்சம் ரூபா தேவைப் படும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது என்றார்.

[க. பா, 5]


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
## யாழ். கிளை, தலைமையகம்
# தையல் பயிற்சி ஆசிரியைகள்

யாழ்ப்பாணம், கரவெட்டி, நெடுந்தீவு, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான, மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் தகைமையும், அனுபவமும் உள்ளோரிடமிருந்து 04-07-92 வரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். 06-07-92 காலை 10-00 மணிக்கு எமது பணிமனையில் நேர்முகப் பரீட்சைக்கும், செய்முறைப் பரீட்சைக்கும் சமுகம் தரவும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
21-06-92

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
(சி/4590)



## தமிழீழ காவல் துறை
# பதவி வெற்றிடம்

### காவலர்/உபபரிசோதகர் பதவிகள்

கல்வி:- 1. காவலர் - க.பொ. த. சாதாரணம்
2. உபபரிசோதகர் - க.பொ. த. உயர்தரம்

உயரம்:- 5 அடி 6 அங்குலம்

வயது:- 18 முதல் 30 வரை

மேற்படி தகைமையும் நல்ல தேகக்கட்டும், திடகாத்திரமும் உள்ள விண்ணப்பதாரிகள் 25-06-1992 வியாழன் காலை 9.00 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள காவல் துறை அலுவலகத்திற்கு சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல் துறை,

23-06-1992

(சி/4591)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**23. 06. 1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4523

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-
28-4333, 24-4560 42-6511. 24-8710, 24-4692 24-5679, 27-1573 24-1040 26-3582, 27-6583, 24-9744, 28-4672, 24-4181, 26-4393, 42-7082, 26-1343, 25-2896, 36-3631. 37 - 57, 25-1124.

வடபகுதிக்கு உள்ளே சென்ற வாகன இலக்கங்கள்:-
26-7234. 27-2056, 26-355 27-9365, 27-9771. 27-6579, 41-8629, 42-2595, 28-1928 24-4153, 42-3739 26-8223, 41 9166, 27-352, 27-8185, 24-5509, 36-6983, 36-5168, 25-9458, 25-5622.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது